

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகைபுரிவதை முன்னிட்டு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் சிதம்பரம், ஜி.எம்.வாண்டையார் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ள உங்களுடன் ஸ்டாலின் துவக்க விழாவிற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் உட்பட பலர் உள்ளனர்.





பெங்களூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இன்டர்நேஷனல் பிசினஸ் கான்பிரன்ஸ் நகரத்தார்2025 என்ற நிகழ்ச்சியில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்ச்சியினை துவக்கி வைத்து விழா சிறப்புரை ஆற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் பேசுகையில் நகரத்தாரின் வாழ்வியல் முறைகள் பற்றியும் சிவகங்கைச் சீமையில் அவர்கள் ஆற்றிய பங்கு பற்றியும் விளக்கி எடுத்துரைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த மருத்துவம் மற்றும் குடும்ப நல்வாழ்வுத்துறை அமைச்சர் தினேஷ் குண்டு ராவ் உட்பட கர்நாடக மாநில உயர் அலுவலர்கள் நகரத்தார் பலர் கலந்து கொண்டனர்.

### கடலூர் மாவட்டத்திற்கு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகையை முன்னிட்டு - முன்னேற்பாட்டுப் பணிகள்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆய்வு!

கடலூர், ஜூலை 14-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகைபுரிவதை முன்னிட்டு முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகைபுரிவதை முன்னிட்டு முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் - மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் ஐயா எல்.இளையபெருமாள் நூற்றாண்டு அரங்கம், பரமேஸ்வரநல்லூர் மற்றும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் நடைபெறும் வாண்டையார் திருமண மண்டபம் ஆகிய இடங்களை நேற்று முன்தினம் (12.07.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அமைச்சர் பெருமக்கள் தெரிவிக்கையில், குறிப்பிட்டதாவது:-

முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக அரசின் சேவைகள் நேரடியாக மக்களுக்கு சென்றடையும் வண்ணம் மக்களுடன் முதல்வர் திட்டத்தினை அறிமுகப்படுத்தி, ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 4 கட்டங்களாக முகாம்கள் நடத்தப்பட்டு, பொதுமக்களின் குறைகள் நிவர்த்திசெய்யப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்கள் 14.07.2025 அன்று கடலூர் மாவட்டத்திற்கு வருகைபுரிந்து, 15.07.2025 அன்று பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசு வழங்கும் சேவைகள் எளிமையாக கிடைத்திடும் வகையில் அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தினை சிதம்பரத்தில் உள்ள தனியார் திருமண மண்டப வளாகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் தொடங்கி வைக்க உள்ளார்.

இத்திட்டத்தில் கீழ் தமிழ்நாடு முழுவதும் நகர்புறப் பகுதிகளில் 3,768 முகாம்களும், ஊரகப் பகுதிகளில் 6,232 முகாம்களும், கடலூர் மாவட்டத்தில் நகர்புறப் பகுதிகளில் 130 முகாம்களும், ஊரகப் பகுதிகளில் 248 முகாம்களும் நடைபெறும். முகாம் நடைபெறும் பகுதிகளில் 2 நாட்களுக்கு முன்பாக தன்னார்வலர்கள் மூலம் பொதுமக்களின் வீடு வீடாக சென்று முகாம் குறித்த விவரங்களை தெரியப்படுத்துவதோடு, விண்ணப்பங்களும் வழங்கப்பட உள்ளன.

மேலும் இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் மட்டுமே வழங்கப்படும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே வாழ்ந்து தனது வாழ்வையே அர்ப்பணித்தவரும், கடலூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தவருமான ஐயா எல்.இளையபெருமாள் அவர்களை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி 110-இன் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டதன் அதனடிப்படையில் ரூ.6.39 கோடி மதிப்பீட்டில் இளைய தலைமுறையினரும் ஐயா எல்.இளையபெருமாள் அவர்களின் தொண்டினை அறிந்திடும் வகையில் திருவுருவச் சிலையுடன் நூற்றாண்டு அரங்கம் கட்டிமுடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட உள்ளது.

இவ்வாறு அமைச்சர் பெருமக்கள் தெரிவித்தனர்.

ஆய்வின்போது, துறை சார்ந்த அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் கல்லூரிகளைத் திறப்பதை கொச்சைப்படுத்துவதா?

# கோவையில் எடப்பாடி பழனிசாமியை கண்டித்து - இன்று கழக மாணவரணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாணவரணிச் செயலாளர் இரா.இராஜீவ்காந்தி அறிக்கை!

சென்னை, ஜூலை 14 -

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி; ஏழை, எளிய, சாமானிய மாணவர்களுக்கு உயர் கல்வி பெற தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் கல்லூரிகளைத் திறந்து வைத்ததை கொச்சைப்படுத்தும் விதமாக கோவையில் பேசியிருக்கும் எடப்பாடி பழனிசாமியை கண்டித்து தி.மு.க. மாணவர் அணி சார்பில் இன்று (ஜூலை 14ஆம் தேதி) “கோவை, டாடாபாத், சிவானந்தா காலனி”யில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும் என்று மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ் காந்தி அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி; ஏழை, எளிய, சாமானிய மாணவர்களுக்கு உயர்கல்வி பெற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் கல்லூரிகளைத் திறந்து வைத்ததை “கல்லூரிகளைத் திறப்பது சதிச்செயல்” என பதவி சுகத்துக்காக பேரறிஞர் அண்ணாவை அடகு வைத்த எடப்பாடி பழனிசாமி இப்போது, “உங்களுக்கெல்லாம் எதற்கு கல்வி?” என்ற சங்கிகளின் குரலாய் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறார்.

கோவில்களுக்கு மக்கள் காணிக்கையாகக் கொடுக்கும் உபரி நிதியிலிருந்து கல்வி நிலையங்கள், சிறார், முதியோர் பராமரிப்பு நிலையங்கள், மருத்துவமனைகள் அமைக்கலாம் என்பது இந்து சமய அறநிலையத்துறையின் சட்டங்களில் ஒன்று. ஆனால் அதுகூடத் தெரியாமல் திராவிட இயக்கத்தின் துரோகியாக, கல்விக்காக திராவிட மாடல் அரசு எடுக்கும் முன்னெடுப்புகளைக் கொச்சைப்படுத்தும் விதமாக கோவையில் பேசியுள்ள எடப்பாடி பழனிசாமியை கண்டித்து தி.மு.க. மாணவர் அணி சார்பில் இன்று (ஜூலை 14ஆம் தேதி,) பிற்பகல் 2.30 மணி அளவில், “கோவை, டாடாபாத், சிவானந்தா காலனி”யில், எனது தி.மு.க. (மாணவர் அணி செயலாளர் இரா. ராஜீவ்காந்தி ) தலைமையில் மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ண சங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராம கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப்பின் நிர்வாகிகள் அவர்களது தோழர்களுடன் பெருந்திரளாக பங்கேற்று, போராட்டத்தை வெற்றியடையச் செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பொன்குமார் தலைமை! முனைவர் கவிஞர் இரவி பாரதி எழுதிய

# ‘தமிழ்நாட்டின் தவப் புதல்வர் காமராஜர்’ நூல்!

## கவிக்கோ விசுவநாதன் வெளியிடுகிறார்! கி.வீரமணி–அமைச்சர் மா.சுப்பிரமணியன்–கு. செல்வபெருந்தகை எம்.எல்.ஏ.–டி.கே.எஸ். இளங்கோவன் வாழ்த்துரை!

சென்னை, ஜூலை 14-

முனைவர் கவிஞர் இரவிபாரதியின் தமிழ்நாட்டின் தவப் புதல்வர் காமராஜர் எனம் நூல் வெளியீட்டு விழா நாளை (15.07.2025-செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணியளவில் தியாகராயர் நகர் சர்பிட்டி தியாக ராயர் அரங்கத்தில் (கண்ணதாசன் சிலை எதிரில்) நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய தலைவர் பொன்குமார் தலைமை வகிக்கிறார்.

வி.ஜி.பி. ரவிதாஸ், டாக்டர் சேதுகுமணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கலைமாமணி ஏர்வாடி இராதா கிருஷ்ணன் வரவேற்புரையாற்றுகிறார். இளம்பாரி உ. கருணாகரன் தொடக்கவுரையாற்றுகிறார்.

இந்நூலை வேலூர் வி.ஐ.டி. பல்கலைக் கழக வேந்தர் கவிக்கோ கோ. விசுவநாதன் வெளியிட்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

முதல் நூலை டாக்டர் வி.ஜி. சந்தோசம் பெற்று வாழ்த்துரை வழங்குகிறார்.

அடுத்து ஐந்து நூல்களை விஜய் வசந்த் எம்.பி., கே.டி.சீனிவாச ராஜா, இரவி, ரோமா ராஜன், கே.பி. வித்யாதரன் ஆகி.யோர் பெறுகின்றனர்.

விழாவில் மணிவாசகர் பதிப்பக உரிமையாளர் சி.எம். மீனாட்சி சோமசுந்தரம், எழுத்தோவியர் நாணா ஆகியோருக்கு சிறப்பு செய்யப்படுகிறது.

நூலாசிரியர் கவிஞர் இரவி பாரதி விளக்க உரையாற்றுகிறார்.

இவ்விழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, அமைச்சர் மா. சுப்பிரமணியன், கு. செல்வம் பெருந்தகை எம்.எல்.ஏ., டி.கே.எஸ். இளங்கோவன், ஏ.எம். விக்கிரமராஜா, எர்ணாவூர் நாராயணன், வி.பி. கலைராஜன், எஸ். ஜோயல், ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

பேராசிரியர் ராஜராஜன் நன்றி கூறகிறார். ஜான் தன்ராஜ் நிகழ்ச்சி நெறியாளராக இருந்து தொகுத்து வழங்குகிறார்.

இவ்விழாவினை விழாக் குழுத் தலைவர், விழாக் குழு உறுப்பினர்கள், விழா ஒருங்கிணைப்பாளர் ஒருங்கிணைக்கின்றனர்.


**12 வது ஆண்டு நினைவு நாள்**



14.7.2013

திருமதி **எஸ்.துரைப்பாண்டிச்சி** அம்மாள்

(க/பெ. மறைந்த கலைமாமணி **எஸ்.எஸ்.சிவசூரியன்** (நடிகர்)

**தாங்கள் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் எங்கள் மனதை விட்டு மறையவில்லை!**

மகன்கள்: **எஸ். சிதம்பரம், எஸ். கந்தகுமார், பூச்சி எஸ். முருகன்**

மற்றும் மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள்


# பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. விளையாட்டு அணி சார்பில் கலைஞர் பிறந்த நாள் விழா!

பெரம்பலூர், ஜூலை 14 -

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம் தலைமையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி தி.மு.க. மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டு முன்னாள் முதல்வர் கலைஞரின் அளப்பரிய செயல்கள் குறித்து பேசினர். அதனைத் தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு விளையாட்டு பொருட்கள் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் விளையாட்டு அணி பொறுப்பாளர்கள், பள்ளி விளையாட்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் திரளாக கலந்து கொண்டனர்

### தி.மு.க. மகளிர் அணி

## கரூர் மாவட்ட துணை அமைப்பாளர் - சமூக வலைதள பொறுப்பாளர் நியமனம்!

**தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!**

கரூர் மாவட்ட மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட திருமதி எஸ்.அனுரேகா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **திருமதி வ.சண்முகவள்ளி** (60/3, அம்மன் நகர், கருப்பகவுண்டன்புதூர் கிழக்கு, பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் வட்டம் - மாவட்டம் - 639 004.) அவர்கள் கரூர் மாவட்ட மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளராகவும்;

**திருமதி ரா.செந்தாமரைச்செல்வி** (206, மாரியம்மன் கோவில் கடைவீதி, பழையூர் அஞ்சல், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம் - 639 004.) அவர்கள் கரூர் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

**“அண்ணாஅறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 12-07-2025

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்,
தி.மு.க. மகளிர் அணி

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

## கரூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் **கரூர் மாநகர** அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கரூர் மாவட்டம்**

**கரூர் மாநகரம்**

அமைப்பாளர் - பி. நிறைமதி 2/ஏ, ராமகிருஷ்ணபுரம் மெயின் ரோடு, செங்குந்தபுரம் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் - 639001.

துணை அமைப்பாளர்கள் - 1) சி. தங்கமணி 18/இ, சங்கரன் பிள்ளை ஸ்டோர், பாலம்மாள்புரம், கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் - 639001. 2) ல. ராதிகா 74,கே.எம்.சி. காலனி, பாலம்மாள்புரம், கரூர்அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர்- 639001. 3) எம். ஜெயலலிதா 301/1, வசந்தம் நகர், கணபதிபாளையம் வடக்கு, தாந்தோணிமலை அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் 639005.

4) பி. தனலட்சுமி 162/ஏ, முதல் கிழக்கு தெரு, திருமாநிலையூர், திருமாநிலையூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் - 639003. 5) வி. சண்முகவள்ளி 60/3, அம்மன் நகர், கருப்பகவுண்டன் புதூர் கிழக்கு பசுபதி பாளையம் அஞ்சல், கரூர் - 639004.

**“அண்ணாஅறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 12-07-2025

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்,
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக இளைஞரணி அறக்கட்டளையிலிருந்து இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவி தொகை, கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி என ஒவ்வொருவருக்கும் தலா 25 ஆயிரம் விதம் 20 பயனாளிகளுக்கு மே மாதத்திற்கான நிதி உதவி வழங்கினார். அதன்படி ஈரோடு வடக்கு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தைச் சேர்ந்த பா.ஸஷ்விகாவிற்கு இளைஞர் அணி சார்பில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என். நல்லசிவம் 25 ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகையினை வழங்கினார். அதுபோது கோபி நகர கழக செயலாளரும், நகர மன்ற தலைவருமான என்.ஆர்.நாகராஜ், வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவேங்கடம் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (03.07.2025) சென்னையில் காணொளிக்காட்சி வாயிலாக (Offline) கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக கட்டிமுடிக்கப்பட்ட நகர்ப்புற நல வாழ்வு மையம் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, மத்திய மண்டலம், வார்டு எண்.63க்குட்பட்ட திருச்சி சாலை, ஒலம்பஸ் பகுதியில் கட்டப்பட்ட நகர்ப்புற நல வாழ்வு மையத்தினை மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், பார்வையிட்டனர். உடன் துணை ஆணையாளர் த.குமரேசன், விஜயகுமார், மரு.பாலுசாமி, மரு.சுமதி, மீனாலோகு, பெ.மாரிசெல்வன், சாந்தி முருகன், மரு.மோகன், மரு.பூபதி, செந்தில்குமரன்(மத்தியம்), துரைமுருகன் (மேற்கு), கருப்பசாமி, மாமன்ற உறுப்பினர்கள் முனியம்மாள், காயத்திரி, ஹேமலதா, குணசேகரன், நடராஜன், மருத்துவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.